[1983 பிப்ரவரி 1]

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த நீலகிரி மாவட்டத்திலே உள்ள கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள், சிறு சிறு அளவில் தேயிலை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்காக ஆரம்பிக்கப்பட்டதாகும். அமைச்சர் அவர்கள் ரூ.6 குறைந்தபட்சக் கூலி என்று சொன்னார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கே குறைந்தபட்சக் கூலி ரூ. 7 என்று நிர்ணயித்திருக்கும்போது ஒரு பாக்டரியிலே வேலை பார்க்கிறவர்களுக்கு ரூ6தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது சீரான நிர்வாகமும் இலாபமும் வந்தால், அது உயர்த்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது சீரான நிர்வாகமும் இல்லாமல், இலாபமும் இல்லாமல் இருப்பதற்கு காரணம், தொடர்ந்து, இந்த கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளுக்குத் தேர்தல் வைக்காமலேயே, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் கீழே நிர்வாகம் இயங்காமல் இருப்பதுதான் என்று தெரிந்து, உடனடியாக அந்தத் தேயிலை தொழிற்சாலைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்பை கூடிய சீக்கிரம் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படும்.

விளாத்திக்குளம் தொகுதியில் பட்டுப்பூச்சி வளர்க்கும் சங்கம் அமைக்கும் திட்டம்

வினா எண் 84.— திரு. ரா. கு. பெருமாள்; மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியில் பட்டுப்பூச்சி வளர்க்கும் சங்கம் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எந்த ஊரில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(ஆ) ஆம் (அ) மற்றும்நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியில் பட்டுத் தொழில் செய்யும் விவசாயிகளின் கூட்டுறவு சங்கம் நாகலாபுரம் என்ற ஊரில் இவ்வாண்டுக்குள் ஆரம்பிக்கப்படும்.

திரு. ரா.கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்தப் பட்டுபூச்சி வளர்க்கும் சங்கம் தற்போது உற்சாகமாக இல்லை என்பது உண்மை. காரணம் என்னவென்றால், விற்பனைக்கு வருகின்ற அந்தப் பட்டுப்பூச்சிக்கான விலை போதுமானதாக, கட்டுப்படியாகக் கூடியதாக இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதை உயர்த்துவதற்கு, அந்த விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு விவசாயத் தொழிலாளர்கள் உற்சாகமாக இல்லையென்று சொன்னார்கள், உற்சாகமாகத்தான் இருக்கிறார்கள். தக்க விலை கொடுக்கப்படுகிறது.

டான்சி தயாரிக்கும் பொருட்களின் விலை

வினா எண். 85— திரு. எம். சின்னசாமி. மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டான்சி தயாரிக்கும் பொருட்களின் விலை வெளியிலுள்ள தனியார் நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களின் விலையைக் காட்டிலும் அதிகமாக இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(அ) டான்சி தயாரிக்கும் பொருட்களின் விலை தனியார் நிறுவனங்கள் தயாரிக்கும் அதேயளவு தரமான பொருட்களின் விலையை விட அதிகமாக இல்லை. காலணிகளைப் பொருத்தவரை முக்கிய தனியார் நிறுவனங்களின் பொருட்களைவிட டான்சி பொருட்களின்விலை குறைவாகவே உள்ளன. மரம், எஃகு ஆகியவைகளிலான மேசை நாற்காலிகள், நிலையறைப்பெட்டிகள், (cubboards) போன்ற பல்வகைத் துணைப் பொருட்களைப் பொருத்தவரை, தனியார் நிறுவனங்களின் அதேயளவு தரமுள்ள பொருள்களின் விலைகளோடு ஏறத்தாழ ஒத்தேயிருக்கின்றன. ஆயத் தீர்வுக்குட்படாத சிறு தொழில்கள் தயாரிக்கும் பொருட்களின் விலை மற்றும் தரமுள்ள மூலப்பொருட்களை கொண்டு செய்யப்படாத சில தனியார் நிறுவனங்களின் பொருட்களின் விலை டான்சி பொருட்களின் விலையைவிட குறைந்திருக்கலாம், ஆனால் அவைகளை மட்டும் ஒத்துப்பார்ப்பது சரியாகாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என் எஸ். வி. சித்தன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்க அலுவலகங்களிலேயும் இன்னும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களிலேயும் இப்படி பொருள்கள் வாங்குகின்ற நேரத்திலே, டான்சியிலே வாங்குவதற்குப் பதிலாக தனியார் நிறுவனங்களிடம் வாங்குவதாலே அவர்களுக்குச் சில சலுகைகள் இருக்கலாம். ஆனால், டான்சியிலே வாங்கினால், டர்ன் ஓவர் அதிகமாகி, அதனாலே விலை குறைய வாய்ப்பிருக்கிறது. ஆகவே இம்மாதிரி அரசாங்க நிறுவனங்களெல்லாம், டான்சியிலேதான் வாங்க வேண்டும், வெளியிலே வாங்கக்கூடாது என்ற தடையை அரசாங்கம் விதிக்குமா? அதன் மூலமாக, நிறைய பொருட்கள் வாங்கப்பட்டால், விலை குறைய வாய்ப்பிருக்குமே, மேலும் விலையைக் குறைக்கலாமே, அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.